2019 ஜுலை 20]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2019–2020, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019–2020 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது.

@ 236 முதல் 241 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜூலை 20

இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 6,862.71 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8 ஆம் நாளன்று 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

இந்திய ரிசர்வ் வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு கூடுதல் பங்கு மூலதன உதவித் தொகையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 1,640 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் 'மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை' என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நிலுவையில் இருந்த கூட்டுறவு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்காக கூட்டுறவு வங்கிகளுக்கு 253.39 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2018–2019 ஆம் ஆண்டு ராபி பருவத்தில், பல்வேறு மாவட்டங்களில் மக்காச்சோளப் பயிர்கள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 186.25 கோடி ரூபாய் உள்ளீட்டு மானியமாக வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் 186.25 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

கோடைக்கால குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும்

கழிவுநீரகற்று வாரியம், நகராட்சி நிருவாகம் மற்றும் பேரூராட்சிகள் இயக்ககங்களுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 226.03 கோடி ரூபாயை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது.

இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 51—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் 226.03 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

மாநில போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 3,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 302.06 கோடி ரூபாயை பங்கு மூலதன உதவியாக வழங்க அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் 302.06 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் தனது நிலுவைத் தொகைகளைச் செலுத்துவதற்காக வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 1,000 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை" என்பதன்கீழ் 1,000 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக தொழில் திட்டங்களுக்கு அமைப்புரீதியான உதவிகளைச் செயல்படுத்தும் திட்டத்தின்கீழ் மதிப்புக் கூட்டு வரியைத் திருப்பி வழங்குவதற்கு கூடுதல் ஒதுக்கீடாக துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 27—தொழில் துறை" என்பதன்கீழ் 1,000 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு இறுதிப் பலன்களை வழங்க மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு குறுகிய காலக் கடனாக துணை மதிப்பீடுகளில் "மானியக்

கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் 1,093 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு வழங்கும் பேருந்து கட்டணச் சலுகைக்காக ஏற்படும் செலவை ஈடுசெய்ய துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் 508 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பணியாளர்களுக்கு 2019—2020 ஆம் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்க துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை" என்பதன்கீழ் 150 கோடி ரூபாய் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்கு ஏற்படும் செலவினங்களுக்கு சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் உரிய தலைப்புகளின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019—2020 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2019—2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1.	மாநிலச் சட்டமன்றம்	61,64,64	..	1
2.	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	44,61,03	..	..
3.	நீதி நிருவாகம்	1,021,15,36	..	..
4.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	3,668,18,24	128,02,50	7,11
5.	வேளாண்மைத் துறை	10,001,41,49	418,68,03	130,75,00

2019 ஜூலை 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
6.	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1,191,91,83	60,48,62	1
7.	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	581,55,99	346,28,92	..
8.	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	58,44,97	200,00,01	..
9.	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	902,86,71	7,10,22	1
10.	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	386,10,69	..	1
11.	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	352,52,87	..	..
12.	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,608,68,59	36,07,21	11,43,50
13.	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	6,159,89,17	481,31,00	..
14.	எரிசக்தித் துறை	9,217,85,17	563,71,25	660,95,81

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
15.	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	11,77,50	1	20,00,01
16.	நிதித் துறை	1,689,89,61	770,00,01	131,22,04
17.	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	1,169,55,58	1	1,00,07
18.	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	211,11,30	..	1
19.	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	11,888,20,43	674,27,14	1
20.	உயர் கல்வித் துறை	4,378,14,13	206,06,54	2
21.	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	1,564,77,17	12,040,42,14	1
22.	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7,645,13,38	430,83,69	5,00,03
23.	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	352,80,08	50,96,39	1
24.	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	319,92,29	3	..

2019 ஜூலை 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
25.	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	323,71,31	1	..
26.	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	3,315,39,78	859,12,14	2,091,00,03
27.	தொழில் துறை	2,647,95,42	3	100,00,07
28.	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	91,74,54	1	..
29.	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	112,00,59	161,95,10	1
30.	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	130,95,78	4	..
31.	தகவல் தொழில்நுட்பவியல் துறை	140,61,81	1	1
32.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	1,367,42,47	71,98,13	1
33.	சட்டத் துறை	30,85,09	..	1
34.	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,698,42,83	7,482,90,11	519,31,08
35.	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	106,70,11	1	50,00

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
36.	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	208,23,55	173,87,03	8,00
37.	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை)	133,09,87	..	..
38.	பொதுத் துறை	808,53,70	2	5,50,00
39.	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	281,58,17	1,004,65,06	1
40.	பாசனம் (பொதுப் பணித் துறை)	2,092,26,83	3,830,54,83	..
41.	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	6,106,94,21	75	1
42.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	16,478,13,04	1,795,47,89	35,00
43.	பள்ளிக் கல்வித் துறை	28,573,01,21	384,31,47	29,51
44.	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	405,26,16	71,00,00	1
45.	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	5,271,98,18	33,53,14	2
46.	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	54,75,61	..	1

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
47.	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	278,86,41	..	..
48.	போக்குவரத்துத் துறை	1,152,82,90	145,00,04	10
49.	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	165,41,19	2,85,75	1
50.	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	32,393,00,00	..	..
51.	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	835,01,36	..	..
52.	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	569,17,19	3,01,56	1
53.	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1,365,39,87	..	1
54.	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	346,58,98	98,45,58	..
	பெருமொத்தம்	180,974,06,38	32,532,92,43	3,677,47,59

7. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2019–2020, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநரிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது.

"In pursuance of clause 2 of Article 205, read with clause 3 of Article 203 of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for further grants for the financial year 2019–2020."